ICAR-வேளாண்மை அறிவியல் மையம்
(தமிழ்நாடு கிராம வளர்ச்சி நிறுவனம், சென்னை)
திருவண்ணாமலை மாவட்டம்-604 410

# கால்நடைகளை தாக்கும் தொற்று நோய்கள் மற்றும் தடுப்பு முறைகள்



**ஆக்கம்**

**மருத்துவர்.கா.மாயகிருஷ்ணன்,** எம்.வி.எஸ்.சி.,
தொழில்நுட்ப வல்லுநர் (கால்நடை அறிவியல்).
**திரு.வே.சுரேஷ்,** எம்.எஸ்.சி., (விவசாயம்)
தொழில்நுட்ப வல்லுநர் (வேளாண் விரிவாக்கம்)

# காால்நடைகளை தாக்கும் தொற்று நோய்களும், தடுப்பு முறைகளும்

## தொண்டைஅடைப்பான் நோய்

பொதுவாக பசுக்கள், எருமை மாடுகள், வெள்ளாடு, செம்மறி ஆடுகளை இந்நோய் தாக்கும். இது பாஸ்ரல்லா மல்டோசிடா என்னும் பாக்டீரியாக்களால் உண்டாகின்றது.

**அறிகுறிகள் :** முதலில் அதிக காய்ச்சல், கண்கள் சிவந்து காணப்படும். எருமைகள் மனிதர்களின் சிறு அசைவிற்க்கு கூட மிரண்டு காணப்படும். தொண்டையின் அடிப்பகுதியில் வீக்கம் ஏற்பட்டு கீழ் நோக்கி பரவும் மாடுகள் மூச்சுவிட சிரமப்படும். வாயில் நீர் வடியும். சில சமயங்களில் வயிற்றுப்போக்கு காணப்படும்.

**தடுப்பு முறைகள்:** ஆறு மாதத்திற்கு ஒருமுறை தடுப்பூசி போட வேண்டும்.

## சப்பைநோய்

இந்த நோய் கிளாஸ்டிரிடியம் சவ்வாய் என்னும் பாக்டீரியா கிருமியால் ஏற்படுகிறது. இந்நோய் பசுக்கள்,எருமைகள், செம்மறி ஆடுகள் மற்றும் வெள்ளாடுகளைத் தாக்கும்.

**அறிகுறிகள் :** இந்நோய் கிருமிகள் தசையில் பெருகி வளர்ந்து காற்று குமிழ்களை உருவாக்குகின்றன. கறவை மாடுகளில் முன்சப்பையோ அல்லது பின் சப்பையோ பாதிக்கப்படுவதால் மாடுகள் தாங்கலாக நடக்கும். இறப்பும் ஏற்படலாம். ஆடுகளில் தோள்பட்டை, முதுகு, சப்பை போன்ற இடங்களில் தோலுக்கு அடியில் வலியும் வீக்கமும் ஏற்படும். மேலும் காய்ச்சல், சோர்வு, பசியின்மை போன்ற அறிகுறிகள் தோன்றும். பாதிக்கப்பட்ட கால்நடைகளுக்கு சிகிச்சை அவ்வளவாகப் பயன் அளிப்பதில்லை.

**தடுப்பு முறைகள்:** ஆறு மாதத்திற்கு ஒருமுறை தடுப்பூசி போட வேண்டும்.

## கோமாரி நோய்

இந்நோய் வாய்சப்பை, கால்காணை என பல பெயர்களில் அழைக்கப்படுகிறது. இந்நோய் ஆப்தோ எனும் நச்சுயிரிகளால் உண்டாகிறது. இந்நோயை உண்டாக்கும் நச்சுயிரி 7 வகைகளையும், 68 துணைவகை நச்சுயிரிகளையும் கொண்டது. ஒவ்வொரு நோய் கிளர்ச்சின் போதும் வேறு வேறு வகையான கோமாரி நோய் நச்சுயிரி தாக்குவதற்கு வாய்ப்புள்ளதால் இந்நோயையைக் கட்டுப்படுத்துவது அவ்வளவு எளிதல்ல.

**அறிகுறிகள் :** காய்ச்சல், வாய் மற்றும் நாக்கில் கொப்பளங்கள், வாயிலிருந்து அதிக அளவில் உமிழ்நீர் வடியும். தீவனம் தின்னாமை, கால்களில் குளம்புகளுக்கு உள்ளேயும், நடுவேயும், மேலேயும் கொப்பளங்கள் உருவாகி உடைந்து புண்களாகி விடும். கால் நொண்டும். கறவை மாடுகளில் மடிநோய் ஏற்படும்.

**தடுப்பு முறைகள்:** எந்த வகை நச்சுயிரிகளால் நோய் உருவாகிறதோ அதற்க எதிரான தடுப்பு மருந்து 3 மாதங்களுக்கு ஒருமுறை போட்டுக்கொள்ளுதல் வேண்டும்.

## அடைப்பான் நோய்

இந்நோய் அதிதீவிரமாக தாக்க கூடியது. இது பேசில்லஸ் ஆந்தராக்ஸ் என்னும் நுண்ணுயிரிகளினால் ஏற்படுகிறது. இந்நோய் ஆடு, மாடு, குதிரை, பன்றி, ஒட்டகம் முதலியவற்றைத் தாக்கும். இக்கிருமிகள் "ஸ்போர்ஸ் எனப்படும் கருக்கூடுகள் அதிக வெப்பத்தை தாங்க கூடியவை. இவை வெப்பம், சூரிய ஒளி மற்றும் நாசினிகள் மூலம் அழிக்க முடியாதவை. இவை (ஸ்போர்ஸ்) பல வருடங்களாக மண்ணுக்குள்ளேயே இருந்து நோய் தாக்கும் திறன் கொண்டவை.

**அறிகுறிகள் :** இந்நோய் தாக்குதலில் எவ்வித அறிகுறியுமின்றி மேய்ந்து கொண்டிருக்கும் மாடுகள் திடீரென்று கால்கள் வெட்டிக்கொண்டு தசை வலிப்பு ஏற்பட்டு இறந்து விடும். தீவர தாக்குதலில் காய்ச்சல், நடுக்கம், வயிற்றுவலி காணப்படும். இறப்பதற்கு முன்னும் இறந்த பின்னரும் மூக்கு, கண், ஆசன வாயிலருந்து இரத்தம் கசியும். செம்மறி மற்றும் வெள்ளாடுகளில் இது போன்ற அறிகுறிகள் காணப்படும்.

**தடுப்பு முறைகள்:** பத்து மாதத்திற்கு ஒருமுறை தடுப்பூசி போட்டுக்கொள்ளுதல் வேண்டும்

## நீலநாக்கு நோய்

இது பொதுவாக இளம் வயது ஆடுகளை அதிக அளவில் பாதிக்கும். இந்நோய் கொசு போன்ற இரத்தம் உறிஞ்சும் பூச்சிகளால் பரவுகின்றது. இது ஒரு வைரஸ் கிருமியால் பரவுகின்றது.

**அறிகுறிகள் :** இந்நோய் கண்ட ஆடுகளில் காய்ச்சல் மற்றும் மூக்கிலிருந்து சளியும், வாயிலிருந்து எச்சிலும் வெளிப்படும். மூக்கும் தாடையும் சிவந்து காணப்படும். கால்குளம்பின் மேல்பகுதியிலுள்ள தோள் ஊதா நிறத்தில் இருக்கும்.

## பி.பி.ஆர்.

இந்நோய் வைரஸ் எனப்படும் நச்சுயிரி கிருமியால் ஏற்படுகின்றது. இது வெக்கை நோய்க்கு மிகவும் நெருங்கிய நச்சுயிரியாகம். இதை போலி வெக்கை நோய் எனவும் அழைக்கலாம்.

**அறிகுறிகள் :** நோயுற்ற ஆடுகளில் காய்ச்சல் 6-8 நாட்கள் வரை இருக்கும். வாயில், புண், கண் மற்றும் மூக்கில் இருந்து நீர் வடிதல், வயிற்று போக்கும் போன்ற அறிகுறிகள் காணப்படும்.

**தடுப்பு முறைகள்:** வருடத்திற்கு ஒருமுறை தடுப்பூசி போடுதல் வேண்டும்.

## இராணிக்கெட் எனும் வெள்ளைக்கழிச்சல் நோய்

இந்நோய் பாரமிக்ஸோ வைரஸ் -1 மூலம் ஏற்படுகிறது. மற்ற பறவைகள் விட கோழிகளை இந்நோய் அதிகமாக தாக்குகிறது. குடல் திசுக்கள், சுவாசத்திசுக்கள் மற்றும் நரம்பு திசுக்களில் இந்த நச்சுயிரி அதிக பாதிப்பை ஏற்படுத்துகிறது.

**அறிகுறிகள் :** குடல் பாதிப்பு, சக்தி இழத்தல், இறக்கை துருத்திக்கொள்ளுதல், பசியிண்மை, பச்சை மற்றும் மஞ்சள் நிற கழிச்சல் போன்றவை காணப்படும். நரம்புத்திசுக்கள் சுவாசத்திசு, பாதிக்கப்பட்ட கோழிகளில் தள்ளாட்டம், வலிப்பு காய்ச்சல், முட்டை உற்பத்தி குறைவு, சுவாசக் கோளாறால் பாதிக்கப்பட்ட பறவைகள் இரண்டு நாட்களில் இறந்து விடும்.

**தடுப்பு முறைகள்:** எட்டு வார வயதுள்ள கோழிகளுக்கு இராணிக்கெட் "கே" தடுப்பூசி போர்வேண்டும்.


**மேலதிக தொடர்புகளுக்கு**

**முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர்**
ICAR-வேளாண்மை அறிவியல் மையம்,
கீழ்நெல்லி, சித்தாத்தூர் அஞ்சல், வெம்பாக்கம் வட்டம்,
திருவண்ணாமலை மாவட்டம்-604410
இணையதளம் : www.kvkthiruvannamalai.com
மின்னஞ்சல் முகவரி : kvktvmalai91@gmail.com
தொலைபேசி : 6384093303